

நேற்று (19.02.2026) துறைமுகம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்–5, வார்டு 54க்குட்பட்ட கொண்டல் தெரு, ஆயலூர் முத்தையா தெருக்களில் 50 ஆண்டுகளுக்கு முன்பாக போட்ட கழிவுநீர் குழாய்கள் பழுதடைந்ததை தொடர்ந்து, அதிக அளவான 250 விட்டம் கொண்ட புதிய கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பதற்கான பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, குடிநீர் செயற்பொறி யாளர் ஆனந்குமார். உதவி செயற்பொறியாளர் செல்வி செம்பகவள்ளி, உள்ளாட்சி பிரதிநிதி கள் எஸ்.முரளி, ஜெய்சங்கர், லண்டன் முருகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் வெள்ளத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள சி.எம்.அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தில் கல்வி பயிலும் கல்லூரி மாணவ – மாணவிகளுக்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி.எஸ். சந்திரன், எம்.எல்.ஏ மடிக்கணினிகளை வழங்கினார். உடன் நிர்வாகிகள் தலைமை செயற்குழு உறுப்பினர் அசோகன், ஒன்றிய கழக செயலாளர்கள் ப.சம்பத்,மா.இரகு, கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


### திரு.வி.க. நகர் தொகுதி – வார்டு எண்.74 ல்

# ஏகாங்கிபுரம் பகுதியில் புதிய நியாய விலைக்கடை அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – ப.தாயகம் கவி கோரிக்கை!

சென்னை, பிப்.20-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று (19/2/2026) காலை நடைபெற்ற வினாக்கள் விடை நேரத்தின் பொழுது திரு. வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி யின் உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எழுப்பிய கேள் விக்கு உணவு மற்றும் உண வுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த பதில் பின்வருமாறு!



**ப. தாயகம்கவி:** திரு.வி.க. நகர் தொகுதி, வார்டு எண்:74ல் , ஏகாங்கிபுரம் பகுதியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அர.சக்கர பாணி:** திரு.வி.க. நகர் தொகுதி யில் ஏகாங்கிபுரம் நியாய விலைக் கடை பனந்தோப்பு குடியிருப்பு பகுதியில் செயல் பட்டு வருகிறது. இக்கடையில் நாளது தேதி வரை 896 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள் ளன. அருகிலுள்ள இரு கடைக ளிலும் நிர்ணயிக்கப்பட்ட எண் ணிக்கையிலே குடும்ப அட்டைகள் உள்ளன. ஆத லால், ஏகாங்கிபுரம் பகுதியில் புதிதாக ஒரு நியாயவிலைக் கடை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதை தெரி வித்துக்கொள்கிறேன்.

**ப. தாயகம் கவி:** திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் வார்டு எண்:74 பனந்தோப்பு இரயில்வே காலனிக்குரிய அந்த நியாயவிலைக் கடையில் ஏகாங்கிபுரம் பகுதியில் வசிக் கின்ற 896 குடும்ப அட்டைதா ரர்கள் அந்தக் கடையில் இணைக்கப்பட்டு பொருட்க ளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். இருப்பினும், அந்த நியாயவிலைக் கடை அமைந்திருக்கின்ற அந்தக் கடையினுடைய கட்டடப் பரப்ப ளவு குறுகிய அளவில் இருப்ப தால் மக்களுக்குத் தேவை யான அத்தியாவசியப் பொருட்களை ஒரே நேரத்தில் இறக்கி இருப்பு வைத்து, விநி யோகம் செய்ய முடியாத சூழ்நி லையில் இரண்டு, மூன்று முறை அந்தப் பொருட்களை இறக்கி வைத்து இருப்பு வைக் கும் நிலை இருக்கின்றது.

மேலும், அந்தப் பொருட்க ளைப் பெற பொதுமக்கள் வரி சையில் நிற்பதால் அந்த வரிசை சாலை வரை செல்கிறது. அப்படி சாலை வரை செல்கின்றபோது அந்தச் சாலையில் போக்குவ ரத்து நெரிசல் ஏற்பட்டு வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் சிர மத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அந்த நியாயவிலைக் கடைக்கு எதிரில் இருக்கின்ற தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில்

இருக்கின்றகாலிஇடத்திலோ அல்லது அம்மா உணவகம் அருகில் இருக்கின்ற மாநாக ராட்சிக்கு சொந்தமான காலி இடத்திலோ புதிய கட்டடம் ஒன் றைக் கட்டித் தர வேண்டும்.

**அமைச்சர் அர. சக்கர பாணி:** உறுப்பினர் அந்தப் பகு தியில் உள்ள மக்கள் படுகின்ற பல்வேறு சிரமங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். உறுப்பினர் குறிப்பிட்ட அந்த காலி இடத்தில் அவருடைய தொகுதி வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தர முன்வருவாரானால் அங்கே ஒரு புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**ப. தாயகம் கவி:** ஏற்கெ னவே, கூட்டுறவுத் துறை அதி காரிகள் கேட்டுக்கொண்டதன் பேரிலும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன்பேரிலும்,

வார்டு எண் 71ல் பெரம்பூர் நெடுஞ்சாலையில் இருக்கின்ற இராஜீவ் காந்தி பூங்கா அருகி லும், ஜமாலியா பள்ளி அருகி லும், பெரம்பூர் நெல் வயல் சாலை அருகிலும்,

வார்டு எண் 72ல் அம்பேத் கர் நகர் 1வது தெருவிலும், திரு. வி.க. நகர் 7வது தெருவிலும், தாஸ் நகர் 2வது தெருவிலும், பழைய வெங்கடேசபுரம் 1வது தெருவிலும், பழைய வெங்க டேசபுரம் 7வது தெருவிலும்,

வார்டு எண் 75ல் எஸ்.எஸ். புரம் என்று அழைக்கப்படு கின்ற சிவசண்முகபுரம் பகுதி யில் "ஏ" பிளாக் மெயின் ரோடி லும்,

வார்டு எண் 75ல் குட்டப் பள்ளம் 1வது தெரு, எட்வர்ட் பார்க் சந்திப்பிலும், அதைப்போ லவே, ராமானுஜம் தெரு சச்சி தானந்தம் தெரு சந்திப்பிலும் ஏற்கெனவே தொகுதி மேம் பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக் கப்பட்டு அங்கு நியாயவிலைக் கடைகள் அமைப்பதற்கான வழிவகை செய்யப்பட் டுவிட்டது.

இதுபோன்ற, மக்கள் நலப் பணிகளுக்கு என்னுடைய சட் டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பயன்படுத்தப் பட்டு, மீதம் நிதி ஏதும் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அரசின் சார்பி லேயே அங்கு புதிய கட்டடம் ஒன்றை கட்டித் தருமாறு கேட் டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அர. சக்கர பாணி:** உறுப்பினர் தன்னு டைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலி ருந்து பல்வேறு வாடகைக் கட்ட டத்தில் இயங்கிவந்த கடைக ளுக்கெல்லாம் சொந்தக் கட்ட டம் கட்டித் தந்ததாக இங்கே குறிப்பிட்டு சொன்னார்கள்.

உள்ளபடியே முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப் பேற்ற பின்பு, தமிழகத்திலே வாடகை கட்டத்தில் இயங்கி வந்த பல்வேறு கடைகளுக் கெல்லாம், சட்டமன்ற உறுப்பி னர்கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சமுதாய பங்களிப்பு நிதி யிலிருந்து சொந்தக் கட்டடங் கள் கட்டப்பட்டுள்ளன.

உண்மையிலேயே உறுப் பினர் பல்வேறு கடைகளுக்கு அவருடைய சட்டமன்ற உறுப் பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒதுக்கி கட்டடம் கட் டிக்கொடுத்திருக்கிறார். அவ ருக்கு இந்த நேரத்திலே துறை யின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அவர் கேட்டிருக் கின்ற கடையை வேறு வாடகை கட்டடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என் பதை இந்த நேரத்திலே தெரி வித்துக்கொள்கிறேன். வரு கின்ற காலத்திலே உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் புதிய கட்ட டம் கட்ட இந்த அரசு நடவ டிக்கை எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் கொள்கை பரப்பு செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் 22-02-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணி அளவில் கனகமாசத்திரம் ஏ.ஜெ.எஸ்.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் சேகர், சண்முகநாதன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.திராவிடபக்தன் ஆர்.டி.இ.ஆதிசேஷன். ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், டாக்டர் வி.சி. ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம். மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு. எஸ்.கே.ஆதாம் வி.கிஷோர் மு. சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் மேற்கண்ட கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

கூட்டத்தில் முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

பொருள்:- 01) 19-02-2026 இன்று காணொளி காட்சி வாயிலாக கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம் பொருள் குறித்து

02) மார்ச் 1 கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழகம் தோறும் வெகு விமர்சியாக கொண்டாடுவது குறித்து

03) 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

04) வெல்லும் தமிழ் பெண்கள் வாக்குச்சாவடி தோறும் பரப்புரை செய்தல் குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

### மாதவரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கான

# "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" பிரச்சார பயிற்சி கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி மற்றும் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கான "வெல்லும் தமிழ் பெண்கள்" பிரச்சார பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதிவீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண், திருவொற்றியூர் பார்வையாளர் மோகன் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது. மேலும் இக்கூட்டத்தில் குமரி விஜயகுமார் மாநில துணைசெயலாளர் மற்றும் மகளிர் ஆணைய தலைவி, டாக்டர் யாழினி மாநில சமூகவலைதள பொறுப்பாளர் ஆகியோர் பயிற்சி அளிக்க உள்ளனர்.

கீழ்காணும் அட்டவணைப்படி பயிற்சி நடைபெற உள்ளது.

| வ.எண் | தொகுதி | நாள் மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | மாதவரம் சட்டமன்ற தொகுதி | 21.02.2026 சனிக்கிழமை காலை 8 மணி | எம் ஆர் பேலஸ் திருமண மண்டபம் மாதவரம் |
| 2 | திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி | 21.02.2026 சனிக்கிழமை காலை 9 மணி | கங்கா ஜெயராஜ் திருமண மண்டபம் சன்னதி தெரு, திருவொற்றியூர் |

மேற்படி "வெல்லும் தமிழ் பெண்கள்" பிரச்சார பயிற்சிக் கூட்டத்திற்கு பாகம் வாரியாக ஒரு மகளிர் குழு தலைவி கலந்து கொள்ளும் வகையில் பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள் குழுத் தலைவிகளை அழைத்து வரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், தலைமையில் நேற்று (19.02.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி நா. பூஷ்ணாதேவி (தேர்தல்கள்), ஜி.சரவணமூர்த்தி (நிலம் (ம) உடைமை),16 சட்டமன்றத் தொகுதி மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சைதை மேற்குப் பகுதி

# போட்டோ ரவி இல்ல மணவிழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்து!

*சென்னை, பிப். 20-*

*சைதை மேற்கு பகுதி 139அ வட்ட முன்னாள் செயற்குழு உறுப்பினர் போட்டோ ரவி மகள். ஆர்.அனுஷா & ஏ.பிர காஷ் திருமண வர வேற்பு நிகழ்ச்சி இன்று (20.02.2026 -வெள்ளிக் கிழமை) மாலை.6.00 மணியளவில், சைதை மோகனாம்பாள் திரு மண மண்டபம்*

*ரங்கபாஷ்யம் தெரு மேற்கு சைதையில் சை.மு.சேகர் தலைமை யில், எம் கிருஷ்ண மூர்த்தி, இரா.துரைராஜ் வழக்கறிஞர்.எம்.ஸ்ரீத ரன் ஆகியோர் முன்னி லையில் நடைபெறுகி றது.*

*இதில் மாவட்ட செய லாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், ப.தாய கம் கவி எம்.எல்.ஏ., க.தனசேகரன், சைதை. மா.அன்பரசன், எம். எஸ்.ஹரிபாபு, களக் காடி.எல்லப்பன், மின் னல் கந்தப்பன், தா.மோகன்குமார்.எம். சி, வழக்கறிஞர்.ப. சுப் பிரமணி.எம்.சி, டி.என். சிவமணி, வி.பி.ஜானகி ராமன், சைதை.த. சம் பத், சைதை.ஆர். ரமேஷ்,*

*கவிதா.கவுதமன், சைதை. சாதிக், ந.தமிழ ரசு, அட்கோ.கமலநா தன், எம்.நாகா, எஸ். பி.கோதண்டன், க.மணி, கோட்டூர்.க. சண்முகம், ஆ.வரதன், ராஜ்குமார், ஆர்.கிருஷ் ணகுமார், நா.மணிகண் டன், மாவட்ட பிரதிநிதி கள்.வீ. மதிவாணன்,*

*ஜி.கே.ராமசந்திரன், டி.வி.நரசிம்மன், ஏ. மஜீத், இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிர காஷ்,*

*சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன்,*

*ஜி.ஏழுமலை, கொடி. சுரேஷ், டி. கோபாலகி ருஷ்ணன், யமஹா. ராஜேஷ், ஜிம்.க.பிரபு,*

*சார்ப்.சரவணன், பூ.பாஸ்கர், ஆர்.சி. ரமேஷ், ஆர்.ஜி.கற்ப கம், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ், எஸ்.கண்ணன், ப.எழிலரசன், ஆர்.பெரு மாள், ஆர்.தாமோத ரன், போட்டோ.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்து கின்றனர்.*

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# தொகுதி வாரியாக 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக 'வெல்லும் தமிழ் பெண்கள்' ஸ்டாலின் மகளிர் படை வீடு வீடாக சென்று தேர்தல் பரப்புரை செய்ய பயிற்சி பாசறை கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

| தொகுதி | தேதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| உத்திரமேரூர் | 21.2.2026 | காலை 10 மணி | பிரியா மஹால், உத்திரமேரூர். |
| காஞ்சிபுரம் | 21.2.2026 | பிற்பகல் 12 மணி | கலைஞர் பவள விழா மாளிகை, காஞ்சிபுரம். |
| மதுராந்தகம் | 23.2.2026 | காலை 10 மணி | அன்னை திருமண மண்டபம், எலப்பாக்கம் சாலை, அச்சரப்பாக்கம். |
| செய்யூர் | 23.2.2026 | பிற்பகல் 2 மணி | கே.எஸ்.மஹால், புத்தூர் கூட்ரோடு, செய்யூர். |

சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மகளிர் நிர்வாகிகள், மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடியில் சாவடிகளில் நியமிக்கப்பட்ட பாக மகளிர் பொறுப்பாளர் ஒருவர் வீதம் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் இருந்து கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே ரமேஷ் ராஜ் முன்னிலையில் சோழவரம் ஒன்றியம் சீமாவரம் அ.தி.மு.க. கிளை செயலாளர் ரகு உள்பட அ.தி.மு.க. நிர்வாகிகள் த.வெ.க நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள் அருகில் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.